Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள், டிசம்பர் 23, 2024 | இதழ் 254

# இனி காவி நிறத்தில் திருவள்ளூர் சிலை வரையக்கூடாது மாணவருக்கு அறிவுறை பள்ளிக் கல்வித்துறைக்கு நிதி ஒதுக்க மும்மொழி கொள்கையை ஏற்க நிர்பந்தம் செய்யும் மத்திய அரசு அமைச்சர் அன்பில் மகேஸ் குற்றச்சாட்டு

சென்னை, 23 டிசம்பர் 2024: பள்ளிக் கல்வித்துறைக்கு நிதி ஒதுக்க, மும்மொழிக் கொள்கையை ஏற்க மத்திய அரசு நிர்பந்திப்பதாக அமைச்சர் அன்பில் மகேஸ் புகார் தெரிவித்துள்ளார்.

மும்மொழிக் கொள்கையை ஏற்றால் அரை மணி நேரத்தில் நிதி அளிக்கப்படும் என கூறுவதாக மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் மீது குற்றஞ்சாட்டி உள்ளார்.

கன்னியாகுமரி கடலில் திருவள்ளுவர் சிலை வைத்து 25ம் ஆண்டு வெள்ளி விழாவையொட்டி, தமிழக அரசு சார்பில் அண்ணா நூலகத்தில் நடந்த ஓவிய கண்காட்சியை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று திறந்து வைத்து பார்வையிட்டார்.

அதன்பின்னர் அமைச்சர் அன்பில் மகேஸ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

பள்ளிக்கல்வித்துறை இணையதளத்திற்கு கட்டணம் செலுத்தவில்லை என்பது தவறு. மாவட்ட கல்வி அலுவலகங்களில் இணையதள இணைப்பு கட்டணங்களை நிலுவை வைக்க வேண்டிய அவசியம் இல்லை. மத்திய அரசு தான் நிலுவை வைத்துள்ளது. அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்க தடை போடுகிறார்கள்.

மும்மொழி கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு நிர்பந்தம் செய்கிறது. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி மற்றும் 10 எம்.பி.க்களுடன் சென்று மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானை டெல்லியில் சந்தித்தார்கள்.

அப்போது மும்மொழி கொள்கையை ஏற்றால் பள்ளிக் கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய நிதியை அரை மணி நேரத்தில் ஒதுக்குகிறோம். நானும் இந்தி பேசாத மாநிலமான ஒரிசாவில் இருந்து தான் வந்துள்ளேன். நானே சொல்கிறேனே? என அவர் தெரிவித்துள்ளார்.

அண்ணா காலத்தில் இருந்து இருமொழிக் கொள்கையை பின்பற்றி வருகிறோம். இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் சென்று தமிழக மாணவர்கள் சாதனை படைத்து வருகின்றனர்.



கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றினால் நம் மாணவர்கள் எது தேவையோ அவற்றை முழுமையாக செய்ய முடியும், நாம் யாரையும் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால்தான் தொடர்ச்சியாக கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசுக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் 29 பைசா மட்டுமே நமக்கு வழங்கப்படுகின்றது. அந்த 29 பைசா வைத்துக் கொண்டு என்ன செய்வது.

இவ்வாறு அவர் கூறினார்.

ஓவிய கண்காட்சியில் மாணவர் ஒருவர் வரைந்த ஓவியத்தில் காவி உடையில் திருவள்ளூர் சிலை வரையப்பட்டிருந்தது. இது சர்ச்சையான நிலையில் குறிப்பிட்ட மாணவரிடம் இனி காவி நிறத்தில் திருவள்ளூர் சிலை வரையக்கூடாது என்று அறிவுறுத்தினோம். தற்போது கண்காட்சியில் இருந்து அந்த ஓவியம் நீக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், 'மத்திய அரசிற்கு முன்மாதிரியாக கல்வியில் வளர்ச்சி அடைந்துள்ள தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிலுவைத் தொகையை தராமல் மத்திய அரசு வஞ்சித்துக் கொண்டிருக்கிறது. பல்வேறு வகைகளிலும் கல்வியில் சாதனை புரியும் நமது மாணவச் செல்வங்களையும், ஆசிரியப் பெருமக்களையும் மத்திய அரசு ஏமாற்றி வருகின்றது. கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும். எங்கள் பிள்ளைகளையும் ஆசிரியப் பெருமக்களையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். எங்கள் மாணவர்களுக்கு என்ன மாதிரியான அறிவுசார் பயிற்சிகள் வழங்க வேண்டும் என்பதை நாங்கள் முடிவு எடுத்துக் கொள்கிறோம்' என்று பதிவிட்டுள்ளார்.

# இதுவரை 10 லட்சம் இளைஞர்களுக்கு அரசு வேலை:மோடி பெருமிதம் 71,000 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்

சென்னை, 23 டிசம்பர் 2024: கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு நிரந்தர அரசு வேலைகளைத் தனது தலைமையிலான அரசாங்கம் வழங்கியுள்ளது. இது ஒரு சாதனை என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உள்துறை, அஞ்சல், உயர்கல்வி, சுகாதாரம் மற்றும் நிதி சேவைகள் உள்ளிட்ட பல்வேறு மத்திய அரசு துறைகளில், பணிக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்ட, 71 ஆயிரம் பேருக்கு வீடியோ கான்பரன்சிங் வாயிலாக இன்று பிரதமர் மோடி பணி நியமன ஆணையை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:

நான் நேற்று இரவு குவைத்தில் இருந்து திரும்பி வந்துள்ளேன். அங்கு இந்திய இளைஞர்கள் மற்றும் தொழிலாளர்களை சந்தித்து பேசியது மகிழ்ச்சி. இன்று நாட்டின் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் கனவு நனவாகியிருப்பது மகிழ்ச்சியான தருணம். இது உங்கள்



அனைவருக்கும் ஒரு புதிய துவக்கம். உங்கள் கடின உழைப்பு இறுதியாக வெற்றி அடைந்துள்ளது.

இன்று அரசு வேலைக்கான பணி நியமன ஆணையை பெற்ற, இளைஞர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாழ்த்துகள். நமது இளைஞர்களின் திறமையை பயன்படுத்தி கொள்ள பா.ஜ.க. அரசு முன்னுரிமை அளிக்கிறது. இதற்கு நீண்ட காலமாக, உழைத்து வருகிறோம்.

விண்வெளியில் இருந்து பாதுகாப்பு வரை மற்றும் சுற்றுலா முதல் சுகாதாரம் வரை, இன்று இந்தியா ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றத்தின் புதிய உச்சங்களை தொட்டு வருகிறது.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல, இளைஞர்களின் திறமைகளை வளர்ப்பது அவசியம். இதற்கான பொறுப்பு நாட்டின் கல்வித் துறையிடம் உள்ளது. புதிய இந்தியாவைக் கட்டியெழுப்ப ஒரு நவீன கல்வி முறை இங்கு அவசியம். அதனை நாடு தற்போது உணர்ந்துள்ளது. தேசிய கல்விக் கொள்கையின் மூலம், நாடு இப்போது அந்த திசையில் நகர்ந்துள்ளது. முன்னதாக, பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் காரணமாக, கல்வி முறை பெரும்பாலும் மாணவர்களுக்கு சுமையாகவே மாறியிருந்தது. ஆனால் இப்போது அவர்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு நிரந்தர அரசு வேலைகளை தனது தலைமையிலான அரசாங்கம் வழங்கியுள்ளது. மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

2047ம் ஆண்டுக்குள் இந்தியா ஒரு முன்னேறிய நாடாக மாறுவதே நாட்டின் குறிக்கோளாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மேக் இன் இந்தியா, ஆத்மநிர்பர் பாரத், ஸ்டார்ட்-அப் இந்தியா, ஸ்டாண்ட்-அப் இந்தியா, டிஜிட்டல் இந்தியா போன்ற திட்டங்கள் இளைஞர்களை முன்னேற்றும் நோக்கில் செயல்பட்டுள்ளன.

இந்தியா, உலகின் 5வது மிகப்பெரிய பொருளாதாரமும் 3வது மிகப்பெரிய ஸ்டார்ட் அப் அமைப்பாகவும் திகழ்கிறது.

நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஆள்சேர்ப்பு செயல்முறை நடத்தப்படுகிறது. முன்னதாக, கிராமப்புற, தலித், பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடி சமூகங்களை சேர்ந்த இளைஞர்களுக்கு மொழி பெரும் தடையாக இருந்தது.

ஆனால் இப்போது, தாய் மொழியில் பாடங்களை கற்பிக்கவும், தேர்வுகளை நடத்தவும் கொள்கைகளை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும், 13 மொழிகளில் தேர்வுகளை எழுதுவதற்கான வாய்ப்பையும் வழங்கியுள்ளோம். கிட்டத்தட்ட, 50,000 இளைஞர்கள் மத்திய ஆயுதப்படையில் சேர்வதற்கான பணி நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர். அரசாங்கத்தின் கொள்கைகள் தற்போது கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றன.

பெரும்பாலான இளைஞர்களுக்கு விவசாயத் துறையில் வேலை கிடைத்துள்ளது. அவர்கள் விரும்பிய பணிகளையும் மேற்கொள்ள வாய்ப்பு உருவாகியுள்ளது. இன்று ஆயிரக்கணக்கான பெண்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டது. உங்கள் வெற்றி மற்ற பெண்களுக்கு ஊக்கமளிக்கும். பெண்களை எல்லாத் துறைகளிலும் தன்னிறைவு பெறச் செய்வதே எங்கள் முயற்சி. பெண்களைத் தடுக்கும் ஒவ்வொரு தடையையும் அகற்ற எங்கள் அரசாங்கம் உழைத்து வருகிறது.

பெண்களுக்கு 26 வார மகப்பேறு விடுப்பு வழங்குவதற்கான அரசின் முடிவு. அவர்களின் தொழில் வாழ்க்கைக்குப் பெரிதும் உதவியுள்ளது. எங்கள் அரசாங்கம் 30 கோடி பெண்களுக்கு ஜன்தன் வங்கி கணக்குகளைத் திறக்க வழிவகை செய்துள்ளது. இது, அவர்கள் அரசாங்கத் திட்டங்களிலிருந்து நேரடியாகப் பயனடைவதை உறுதி செய்துள்ளது.

முத்ரா யோஜனா திட்டத்தின் மூலம் பெண்களுக்கு அடமானமின்றி கடன்களை பெறும் வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது. பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின் மூலம் வீடுகள் பெரும்பாலும் பெண்களின் பெயரில் வழங்கப்பட்டு வருகின்றன. போஷண் அபியான், சுரக்ஷித் மாத்ரித்வ அபியான், ஆயுஷ்மான் பாரத் போன்ற திட்டங்கள் பெண்களுக்கு மேம்பட்ட மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.






PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

உள்ளது உள்ளபடி

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்பை கொண்டாட 'ராஜஸ்தானி - தமிழ் சேவா விருதுகள்' - ஐ வழங்கும் ராஜஸ்தானி சங்கம் - தமிழ்நாடு



சென்னை, 23 டிசம்பர் 2024: சமூகசேவை மற்றும் கலாச்சார ஒருங்கிணைப்பை தனது குறிக்கோளாக கொண்டு சிறப்பாக இயங்கி வரும் ஒரு புகழ்பெற்ற அமைப்பான ராஜஸ்தானி சங்கம் - தமிழ்நாடு (சங்கம்) ராஜஸ்தானி - தமிழ் சேவா விருதுகள் என்ற புதிய திட்டம் தொடங்கப்படுவதை இன்று பெருமையுடன் அறிவித்திருக்கிறது. சென்னையில் இன்று நடைபெற்ற இதன் தொடக்கவிழா நிகழ்வில் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதியரசர் திரு, சி. சரவணன் மற்றும் இந்தியன் வங்கியின் நிர்வாக இயக்குனர் & தலைமை செயலாக்க அதிகாரி திரு. சாந்திலால் ஜெயின் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்டு சிறப்பித்தனர். தமிழ்நாடு மாநிலம் மற்றும் அதன் மக்களின் நலவாழ்வில் அர்த்தமுள்ள வகையில் முன்னேறச் செய்திருக்கின்ற தனிச்சிறப்பான பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதத்தில் ராஜஸ்தானி தமிழ் சேவா விருதுகள் நிறுவப்பட்டிருக்கின்றன. கீழ்வரும் எட்டு முக்கிய வகையினங்களில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன: விவசாயம் மற்றும் ஊரக மேம்பாடு, பொது சேவைகள், கல்வி மற்றும் சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் நிலைப்புத்தன்மை, தொழில்முனைவுத்திறன் மற்றும் தொழில்துறை, சமூக நலம், ஊடகம் மற்றும் தகவல்தொடர்பு தமிழ்நாடு மாநிலத்தை முன்னேறுமாறு பணியாற்றியிருக்கின்ற தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் ஏற்படுத்தியிருக்கும் ஆழமான தாக்கத்தை இவ்விருதுகள் கௌரவித்துக் கொண்டாடுகின்றன. துக்ளக் தமிழ் வாராந்திர இதழின் ஆசிரியரும் மற்றும் புகழ்பெற்ற சிந்தனையாளருமான திரு. எஸ். குருமூர்த்தி தலைமையிலான நடுவர்கள் குழுவில் அண்ணா பல்கலையின் முன்னாள் துணைவேந்தர் புரொஃபசர் ஈ. பாலகுருசாமி இந்து நாளிதழின் முன்னாள் தலைமையாசிரியரும், மூத்த பத்திரிக்கையாளருமான திரு, என். ரவி, பகவான் மகாவீர் அவார்ட்ஸ் அமைப்பின் நிறுவனரும், அறக்கொடையாளருமான திரு. என். சுகல்சந்த் ஜெயின் மற்றும் பத்மபூஷன் விருதாளரும், உலகளவில் புகழ்பெற்ற பரதநாட்டிய நிபுணருமான டாக்டர். பத்மா சுப்ரமணியம் ஆகிய பிரபல ஆளுமைகள் இடம்பெற்றிருக்கின்றனர். தலைமை விருந்தினரான மாண்புமிகு நீதியரசர் திரு. சி. சரவணன் இந்நிகழ்வில் கூறியதாவது: "தமிழ்நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்ற தமிழர்கள் மற்றும் ராஜஸ்தானிகள் என்ற இரு சிறப்பான சமூகங்களுக்கிடையே நிலவும் ஒற்றுமை உணர்வின் ஆற்றல்மிக்க குறியீடாக ராஜஸ்தானி - தமிழ் சேவா விருதுகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்விருதுகள், தனிநபர்களின் நேர்த்தியான பங்களிப்பை கொண்டாடுவதோடு நின்றுவிடாமல் மாநிலத்தின் முன்னேற்றம் மீது சேவையின் கூட்டு தாக்கத்தையும் முன்னிலைப்படுத்துகின்றன. தமிழ்நாட்டின் நல்வாழ்விற்கு வழங்கப்பட்டிருக்கும் சுயநலமற்ற பங்களிப்புகளை அங்கீகரித்து கௌரவிக்கும் இவ்விருதுகள், சேவையின் பாதையை பிற நபர்களும் பின்தொடரவும், ஒற்றுமையை பேணி வளர்க்கவும், முன்னேற்றத்திற்கு வழிவகுக்கவும் மற்றும் அர்த்தமுள்ள மாற்றத்தை சமூகத்தில் உருவாக்கவும் உத்வேகமளிக்கும்." இந்தியன் வங்கியின் நிர்வாக இயக்குனர் & தலைமை செயலாக்க அதிகாரி திரு. சாந்திலரல் ஜெயின் தனது உரையில் கூறியதாவது: "பல தலைமுறைகளாக, வர்த்தகம், கல்வி மற்றும் அறக்கொடை போன்ற பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்புகளை வழங்கி, தமிழ்நாட்டின் கலாச்சார மற்றும் பொருளாதார செயல்தளத்தின் ஒருங்கிணைந்த ஒரு அங்கமாக இராஜஸ்தானி சமூகம் இருந்து வருகிறது. தமிழ்நாடு மாநிலத்தின் மக்களது வாழ்க்கையில் ஒரு மேம்பட்ட மாற்றத்தை உருவாக்குவதற்கு தனித்துவமான முன்னெடுப்புகளை மேற்கொண்டிருக்கின்ற தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் மகத்தான முயற்சிகளை அங்கீகரிப்பதில் ராஜஸ்தானி தமிழ் சேவா விருதுகள் என்பது, பாராட்டுதலுக்குரிய ஒரு முன்னேற்ற நடவடிக்கையாகும். இந்த நபர்கள் மற்றும் அமைப்புகளின் அர்ப்பணிப்பு மற்றும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு உத்வேகமளித்திருக்கின்ற சேவை உணர்வை நேர்த்தியாக பிரதிபலிக்கிறது." ராஜஸ்தானி சங்கம் தமிழ்நாடு - ன் தலைவர் திரு. பிரவீன் குமார் டாட்டியா கூறியதாவது: "ராஜஸ்தானி - தமிழ் சேவா விருதுகள் என்பவை, சமுதாயத்தின் மீது நீடித்து நிலைக்கும் தாக்கத்தை உருவாக்குகின்ற நபர்களின் பணியையும், சேவையையும் கௌரவிக்கும் எமது நிலையான பாரம்பரியத்தை பிரதிபலிக்கின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் பங்கேற்றிருக்கும் நடுவர்கள் குழுவால் தேர்வு செய்து வழங்கப்படவிருக்கும் இந்த கௌரவம் மிக்க அங்கீகாரம், தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் நிலைமாற்றத்தை முன்னெடுக்கின்ற தனிநபர்களையும், அமைப்புகளையும் பாராட்டி கொண்டாடுகிறது, இத்தகைய பங்களிப்புகளை அங்கீகரிப்பதன் வழியாக, இன்னும் அதிக அளவிலான சேவை உணர்வை தூண்டுவதும், ஒத்துழைப்பை ஊக்குவிப்பதும் மற்றும் ராஜஸ்தானி சமூகத்திற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் இடையிலான பிணைப்பை மேலும் வலுவாக்குவதும் எமது நோக்கமாகும்." ராஜஸ்தானி தமிழ் சேவா விருதுகள் குழுவின் தலைவர் திரு, நரேந்திர ஸ்ரீஸ்ரீமால் கூறியதாவது: "50 ஆண்டுகளுக்கும் அதிகமாக இயங்கி வரும் இச்சங்கம், கல்வி, சுகாதார பராமரிப்பு மற்றும் கலாச்சார ஒருங்கிணைப்பு ஆகியவற்றை முன்னெடுப்பதன் வழியாக மேம்படுத்தும் குறிக்கோளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது. ராஜஸ்தானி - தமிழ் சேவா விருதுகள், இந்த செயல்நோக்கத்தை மேலும் முன்னெடுத்து செல்கின்றன; தமிழ்நாட்டின் நலவாழ்விற்கு தங்களது தளர்வில்லாத அர்ப்பணிப்பின் மூலம் அர்த்தமுள்ள நேர்மறையான மாற்றத்தை உருவாக்குகின்ற நபர்களை இவ்விருதுகள் கௌரவிக்கின்றன. இவர்களின் இந்த முயற்சிகளை விருதுகளின் மூலம் அங்கீகரிப்பதன் வழியாக, சேவை மீதான எமது பொறுப்புறுதியை நாங்கள் மீண்டும் உறுதி செய்கிறோம்; தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் செழுமைக்கு பங்களிப்பை தொடர்ந்து வழங்க எதிர்கால தலைமுறையினருக்கும் இவை உத்வேகமளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." 2025 மார்ச் மாதம் முதல் ஆண்டுக்கு ஒரு முறை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் ராஜஸ்தானி - தமிழ் சேவா விருதுகள், சமூக சேவையில் இச்சங்கம் கொண்டிருக்கும் நீண்டகால பாரம்பரியத்தில் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க மைல்கல்லாகும். 1967-ம் ஆண்டில், நிறுவப்பட்டதிலிருந்து கலாச்சார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு வலுவான தூணாகத் திகழும் இச்சங்கத்தால் நிறுவப்பட்டிருக்கும் இவ்விருதுகள், செயல்பாட்டில் நேர்த்தி, அனைத்து தரப்பினரும் பயன்பெறுமாறு ஒன்று சேர்ப்பது மற்றும் கூட்டு முன்னேற்றம் ஆகிய மதிப்பீடுகளுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கின்றன. பல்வேறு துறைகளில் மிகச்சிறப்பான பணியை கொண்டாடுவதன் வழியாக, சமூக புத்தாக்கம், சமுதாய நலவாழ்வு, நிலைப்புத்தன்மையுள்ள முன்னேற்றம் போன்றவற்றிற்கு ஆதரவளிக்க தனிநபர்களையும் மற்றும் அமைப்புகளையும் ஊக்குவிக்கும். வெவ்வேறு சமூகங்களுக்கிடையே ஒத்திசைவை வலுப்படுத்துவதற்கும், எதிர்காலத்திற்கு ஒருங்கிணைந்த தொலைநோக்கு கண்ணோட்டத்தை பேணவும், சிறந்த செயல்தளமாகவும் இவ்விருதுகள் இருக்கும். இந்த மதிப்பீடுகளை தங்கள் செயல்பாடாக கொண்டிருக்கின்ற தனிநபர்கள் மற்றும் அமைப்புகள், அவைகளின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும் மற்றும் தமிழ்நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் நபர்களை கொண்டாடவும் எங்களோடு இணையுமாறு அன்புடன் அழைக்கிறோம். இச்சங்கத்தின் அதிகாரப்பூர்வ தளங்களின் வழியாக, விண்ணப்பங்களை இப்போது சமர்ப்பிக்கலாம்; இதற்கான விரிவான வழிகாட்டல்கள் அவற்றில் வழங்கப்பட்டிருக்கின்றன. ராஜஸ்தானி தமிழ் சேவா விருதுகளுக்கான விவரங்களைப் பெறுவதற்கான இணைப்பு: <https://rajasthanitamil.org/>.

# அமெரிக்காவின் ஏ.ஐ. தொழில்நுட்ப முதுநிலை ஆலோசகராக எஸ் ஆர் எம் மாணவர் சென்னை தமிழர் ஸ்ரீராம் கிருஷ்ணன் நியமனம்



சென்னை, 23 டிசம்பர் 2024: அமெரிக்காவின் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.,) அறிவியல் தொழில்நுட்ப முதுநிலை ஆலோசகராக சென்னை தமிழர் ஸ்ரீராம் கிருஷ்ணனை நியமித்து டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்கா அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டிரம்ப், தனது அரசில் பணியாற்றுபவர்களை தேர்வு செய்யும் பணியில் முழு கவனம் செலுத்தி வருகிறார். அதன்படி, தொழிலதிபர்கள் எலான் மஸ்க் உள்ளிட்ட பலருக்கு தங்களின் அரசின் முக்கிய பொறுப்புகளை கொடுத்துள்ளார். அதேபோல, விவேக் ராமசாமி உள்ளிட்ட இந்திய வம்சாவளியினரும் டிரம்ப்பின் அரசு நிர்வாகத்தில் இடம்பிடித்துள்ளனர்.

இந்த நிலையில், இந்தியாவை சேர்ந்த ஸ்ரீராம் கிருஷ்ணனை, செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.,) தொடர்பான அறிவியல் தொழில்நுட்ப முதுநிலை ஆலோசகராக நியமித்துள்ளார். தொழில் முனைவோரான ஸ்ரீராம் கிருஷ்ணன், எழுத்தாளர் மற்றும் முதலீட்டாளர் ஆவார். முன்னதாக, மைக்ரோசாப்ட், டுவிட்டர், யாகூ, பேஸ்புக் நிறுவனங்களிலும் பணியாற்றியுள்ளார். தமிழரான இவர் சென்னை காட்டாங்கொளத்துரில் உள்ள எஸ்.ஆர்.எம்., பொறியியல் கல்லூரியில் பட்டப்படிப்பு படித்துள்ளார்.

'பிரபல தொழிலதிபரான டேவிட் சேக்ஸுடன் பணியாற்றிய ஸ்ரீராம் கிருஷ்ணன், ஏ.ஐ.,க்கான அமெரிக்க தலைமை பொறுப்பை கவனிக்க இருக்கிறார். அரசின் ஏ.ஐ., கொள்கையை வடிவமைக்க இருக்கும் இவர், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அதிபரின் ஆலோசனைக் குழுவிலும் இடம்பெற்றுள்ளார்,' என்று அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். புதிய பொறுப்பை கொடுத்த அதிபர் டிரம்ப்புக்கு ஸ்ரீராம் கிருஷ்ணன் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# தண்டவாளத்தில் விரிசல்: டிரைவரின் சாமர்த்தியத்தால் சென்னை - புதுச்சேரி ரெயில் விபத்திலிருந்து தப்பியது




சென்னை, 23 டிசம்பர் 2024: விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே ரயில் தண்டவாளத்தில் ஏற்பட்ட விரிசல் காரணமாக அதிர்வுகள் கேட்டதால் சென்னை புதுச்சேரி பயணிகள் ரெயில் டிரைவர் உடனடியாக ரயிலை நிறுத்தனார். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டு பயணிகள் உயிர் தப்பினர்.

சென்னை எழும்பூரில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக் கொண்டு புதுச்சேரி நோக்கி சென்ற பயணிகள் ரயில், விழுப்புரம் மாவட்டம் ஒங்கூர் அருகே வந்தபோது திடீரென கடுமையான அதிர்வு ஏற்படுவதை உணர்ந்த ரயில் ஓட்டுநர் உடனடியாக ரயிலை நிறுத்தி விட்டு கீழே இறங்கி சென்று தண்டவாளத்தை பார்த்துள்ளார். அப்போது தண்டவாளத்தில் விரிசல் ஏற்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த ரயில் ஓட்டுநர், இது தொடர்பான தகவலை உடனடியாக திண்டிவனம் ரயில் நிலையத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து ரயில்வே பொறியாளர்களும், ரயில்வே ஊழியர்களும், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தண்டவாளத்தில் ஏற்பட்ட விரிசலை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். ரயில் பாதி வழியில் நிறுத்தப்பட்டதால் அவ்வழியாக சென்ற மற்ற ரயில்களும் ஆங்காங்கே நடுவழியில் நிறுத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து ரயில் தண்டவாளத்தில் ஏற்பட்ட விரிசல் சரி செய்யப்பட்ட பிறகு சுமார் ஒரு மணி நேரம் கால தாமதமாக ரயில், புதுச்சேரி நோக்கி புறப்பட்டு சென்றது. ரயில் ஒரு மணி நேரம் தாமதமாக சென்றதால் ரயிலில் வந்த பயணிகள் பெரிதும் அவதி அடைந்தனர்.

இதன் காரணமாக அந்த வழியாக சென்ற திருச்செந்தூர் விரைவு ரயில், குருவாயூர் விரைவு ரயில், சோழன் விரைவு ரெயில் உள்ளிட்ட பல்வேறு விரைவு ரயில்கள் ஒரு மணி நேரம் காலத்தாமதமாக சென்றன.

தண்டவாளத்தில் ஏற்பட்டிருந்த விரிசலை கண்டறிந்து சரியான நேரத்தில் ரயிலை நிறுத்திய ரயில் ஓட்டுநரின் சாமர்த்தியதால் பெரும் ரயில் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

# ஓசூரில் யானை தந்தங்களை விற்க முயன்ற 7 பேர் கைது

சென்னை, 23 டிசம்பர் 2024: ஓசூரில் யானைத் தந்தத்தை விற்பனை செய்ய முயன்ற 7 பேரை வனத்துறையினர் கைது செய்து அவர்களிடமிருந்து 2 தந்தங்களை பறிமுதல் செய்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே வனப்பகுதியில் மர்ம நபர்கள் யானைகளை வேட்டையாடி தந்தங்களை விற்பனை செய்து வந்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து தருமபுரி மண்டல வனப்பாதுகாவலருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் பேரில் ஓசூர் வனக்கோட்ட உயிரின காப்பாளர் சுதாகர் உத்தரவிட்டதை தொடர்ந்து, வனச்சரகர் பார்த்தசாரதி மற்றும் வனப்பணியாளர்கள் இஎஸ்ஐ ரிங் ரோடு மத்தம் சர்க் பகுதியில் வாகன சோதனையில் ஈடுப்பட்டனர். அப்போது அந்த வழியாக வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனை செய்த போது அதில் யானையின் தந்தங்கள் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து தந்தத்தை கொண்டு வந்த இருதுகோட்டை திப்பனூரை சேர்ந்த வெங்கடேஷ் (வயது 27), கர்நாடக மாநிலம் ஆனேக்கல் பகுதியை சேர்ந்த மாரநாயக்கன் ஹள்ளியை சேர்ந்த விஜயகுமார் (வயது 25), ஊத்தங்கரை ஒந்தியம் புதுார் பகுதியை சேர்ந்த ஹரிபூபதி (வயது 39), நாராயணநகர் பகுதியை சேர்ந்த பரந்தாமன் (வயது 27), ஆகிய 4 பேரை கைது செய்து அவர்களிடமிருந்த தந்தத்தை பறிமுதல் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், மேலும் இதில் தொடர்புடைய அய்யூரை சேர்ந்த முனிராஜ் (வயது 29), தொளுவபெட்டா பழையூர் கிராமத்தை சேர்ந்த லிங்கப்பா (வயது 39), பசலிங்கப்பா ஆகிய 3 பேரையும் கைது செய்தனர்.

மேலும் இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள முக்கிய குற்றவாளிகளான பெட்டமுகிலாளம் போப்பனூரை சேர்ந்த பசப்பா மற்றும் ஜெயபுரத்தை சேர்ந்த மத்தூரிகா ஆகிய 2 பேரையும் வனத்துறையினர் தேடி வருகின்றனர்.

இவர்களையும் பிடித்து விசாரணை செய்த பின்னரே யானை எங்கு வேட்டையாடப்பட்டது என தெரிய வரும். 7 பேரையும் கைது செய்த வனத்துறையினர் அவர்களிடமிருந்து இருசக்கர வாகனம் மற்றும் செல்போன் 2 யானைத் தந்தங்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். இதன் பின்னர் 7 பேரையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# இந்தியாவில் முதன் முதலாக ஃபன்ஸ்கூல் நடத்திய கட்டான் (சி ஏ டி ஏ என்) சேம்பியன்ஷிப்: தேசிய சேம்பியனாக வெற்றி பெற்ற ஷோபித் கசேரா




சென்னை, 23 டிசம்பர் 2024: இந்தியாவின் முன்னணி விளையாட்டு பொம்மைகள் மற்றும் கேம்கள் தயாரிப்பாளரான ஃபன்ஸ்கூல் இந்தியா லிமிடெட், சமீபத்தில் மும்பையில் ஃபீனிக்ஸ் மார்க்கெட் சிட்டியில் அமைந்துள்ள டப்ளின் ஸ்கொயரில் இந்தியாவின் முதல் சி ஏ டி ஏ என் தேசிய சேம்பியன்ஷிப் போட்டியை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியது. மேற்கு வங்க மாநிலத்தின் கொல்கத்தாவைச் சேர்ந்த சோபித் கசேரா, இந்தியா சி ஏ டி ஏ என் தேசிய சேம்பியனாக வெற்றிவாகை சூடியிருக்கிறார். 2025 ஏப்ரல் 4 முதல் 6-ம் தேதி வரை ஜெர்மனியின் ஸ்டுட்கார்ட் நகரில் நடைபெறவிருக்கும் சி ஏ டி ஏ என் உலக சேம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் பிரதிநிதியாக சோபித் பங்கேற்பார். அவரது அனுபவம் குறித்து சோபித் கசேராவிடம் கேட்டபோது," சி ஏ டி ஏ என் விளையாடுவது எனக்கு மிகவும் பிடிக்கும். அதனுடனான எனது பயணம் தொடர்ந்து வியப்பூட்டுவதாகவே இருந்திருக்கிறது. இந்தியாவில் இப்போட்டியில் வெற்றி பெற்றிருப்பது எனது நீண்டகால கனவை நனவாக்கியிருக்கிறது. மும்பையில் இந்த விளையாட்டு நிகழ்வு, உற்சாகமும், குதூகலமும் கலந்ததாக மிக அற்புதமாக இருந்தது. இதனை ஏற்பாடு செய்த ஃபன்ஸ்கூல் நிறுவனம் இதனை உண்மையிலேயே என்றும் பசுமையாக நினைவில் இருக்கக்கூடிய அனுபவமாக ஆக்குவதற்கு மிகச்சிறப்பாக செயல்பட்டது." என்று பதிலளித்தார். டெல்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் பெங்களூரு என இந்தியாவில் நான்கு நகரங்களில் இப்போட்டிக்கான தகுதிகாண் சுற்றுகள் நடத்தப்பட்டன.

அதைத் தொடர்ந்து, இந்தியா சி ஏ டி ஏ என் நேஷனல் சேம்பியன்ஷிப் மும்பையில் நடைபெற்றது. இந்தியாவின் மிகப்பெரிய போர்டு கேம்கள் கன்வென்ஷன் என புகழ்பெற்ற மீப்பிள்கான் உடன் சேர்ந்து சி ஏ டி ஏ என் நேஷனல் சேம்பியன்ஷிப்பை மும்பை மாநகரில் ஃபன்ஸ்கூல் நடத்தியது, இப்போட்டியில் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். சி ஏ டி ஏ என் என்பது, உலகை ஆராயவும், கண்டறியவும், வர்த்தகம் செய்யவும் மற்றும் கட்டவும் முற்படுகின்ற ஒரு சக்தி வாய்ந்த உலகளாவிய தேடலாகும். செயல்உத்தி மற்றும் ஆராய்ச்சியில் அடித்தளத்தைக் கொண்டிருக்கும் இவ்விளையாட்டு மாறுபடக்கூடிய நிலப்பகுதிகளை ஆராய்ந்து அறிந்து நிபுணத்துவம் பெறுவது மற்றும் கட்டுமானம் செய்வதற்கும் மற்றும் செழித்து வளர்வதற்கும் சரியான நடவடிக்கைகளை செய்வது குறித்ததாகும். அஸ்மோடி இன்டர்நேஷனல் நிறுவனத்திடமிருந்து உரிமம் பெற்றிருக்கின்ற ஃபன்ஸ்கூல், உலகளவில் புகழ்பெற்ற போர்டு விளையாட்டான சி ஏ டி ஏ என் - ஐ இந்தியாவில் தயாரித்து வினியோகிக்கிறது. இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து, இந்திய மக்களிடம் மகத்தான வரவேற்பை பெற்றிருக்கும் சி ஏ டி ஏ என், இந்நாட்டின் போர்டு கேம் செயல்தளத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக வளர்ச்சி கண்டிருக்கிறது. மூலோபாய உத்தி வாய்ந்த இந்த விளையாட்டின் மகிழ்ச்சியை இந்தியாவில் இன்னும் அதிகமான மக்களுக்கு கொண்டு செல்வதே இக்கூட்டாண்மையின் நோக்கம். இன்னும் சிறப்பான வளர்ச்சியை எட்டுவதற்காக புகழ்பெற்ற சர்வதேச பிராண்டுகளுடன் இந்தியாவில் முதன்மை வகிக்கும் ஃபன்ஸ்கூல், பல்வேறு ஒத்துழைப்பு உடன்பாடுகளை மேற்கொண்டு, அதன் செயற்பரப்பை விரிவாக்கி வருகிறது. பி ஐ எஸ் சான்றிதழ் பெற்ற ஃபன்ஸ்கூல் -ன் தொழிலகங்களில் தங்களது உலகளவில் புகழ்பெற்ற கேம்களையும், விளையாட்டு பொம்மைகளையும் இந்தியாவில் உற்பத்தி செய்ய சர்வதேச விளையாட்டு பொம்மை / கேம் தயாரிப்பாளர்களால் மிக சிறந்த பார்ட்னராக ஃபன்ஸ்கூல் இந்தியா பார்க்கப்படுகிறது.

# சங்ககிரி ராஜ்குமார் இயக்கத்தில் சத்யராஜ், சேரன் சிறப்பு தோற்றத்தில் நடிக்கும் 'பயாஸ்கோப்'




சென்னை, 23 டிசம்பர் 2024: பெரிதும் பாராட்டப்பட்ட 'வெங்காயம்' திரைப்படத்தின் மூலம் கவனத்தை ஈர்த்த இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் தனது அடுத்த படைப்பாக உருவாக்கியுள்ள படம் 'பயாஸ்கோப்'. 25 டாட்ஸ் கிரியேஷன்ஸ் சார்பில் சந்திர சூரியன், பிரபு சுப்பிரமணி, பெரியசாமி தயாரித்துள்ள இப்படம் ஜனவரி 3 அன்று வெளியாகிறது. டீசரை நடிகர்கள் ஆர்யா மற்றும் சசிகுமார் வெளியிட்டனர்.

சினிமா குறித்து எதுவும் தெரியாத கிராமத்து மக்கள் திரைப்படம் எடுக்கும் கலகலப்பான உண்மைக் கதையை திரையில் சொல்லும் 'பயாஸ்கோப்' திரைப்படத்தில் சத்யராஜ் மற்றும் சேரன் சிறப்பு தோற்றத்தில் நடிக்க, சங்ககிரி ராஜ்குமார், சங்ககிரி மாணிக்கம் முக்கிய பாத்திரங்களில் தோன்றுகின்றனர். மேலும், இந்த உண்மைக் கதையில் அசலான கதை மாந்தர்களே அவரவர் வேடங்களை ஏற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

'பயாஸ்கோப்' குறித்து பேசிய இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார், "ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்து நான் 'வெங்காயம்' திரைப்படத்தை எப்படி எடுத்தேன், அதில் சந்தித்த சவால்கள் என்ன, அந்த திரைப்படம் ஏற்படுத்திய தாக்கங்கள் எத்தகையவை என்பதை வெளிப்படுத்தும் படம் தான் 'பயாஸ்கோப்'. 'வெங்காயம்' திரைப்படம் உருவான கதையை ஆவணப்படமாக எடுக்க வேண்டும் என்று இயக்குநர் மிஸ்கின் உள்ளிட்ட பலர் தெரிவித்திருந்தனர். அதன் விளைவாக 'பயாஸ்கோப்' திரைப்படத்தை உருவாக்கி இருக்கிறோம்," என்றார்.

தொடர்ந்து பேசிய சங்ககிரி ராஜ்குமார், "பயாஸ்கோப் திரைப்படம் ரசிகர்களை கவரும் வகையில் உருவாகியுள்ளது. சினிமாவைப் பற்றி எந்த அறிமுகமும் இல்லாமல் கிராமத்து மக்கள் எப்படி ஒரு திரைப்படத்தை உருவாக்கினார்கள் என்பதை கலகலப்பாகவும் படம் முழுக்க நகைச்சுவையுடன் சொல்லியிருக்கிறோம். இப்படத்தை எடுத்த அனுபவம் அலாதியானது," என்றார்.

'பயாஸ்கோப்' திரைப்படத்திற்கு தாஜ்நூர் இசையமைக்க, முரளி கணேஷ் ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் வெளியீட்டுக்காக புரொடியூசர் பஜார் நிறுவனத்துடன் சங்ககிரி ராஜ்குமார் கைகோர்த்துள்ளார். படத்தின் ஓடிடி வெளியீட்டு உரிமையை ஆஹா பெற்றுள்ளது.

# மிஆ பை தனிஷ்க், சென்னை வாடிக்கையாளர்களுக்காக அசத்தல் ஸ்டைலுடன் ரன்வே ஸ்டார் நிகழ்ச்சியையும், 4 புதிய விற்பனை நிலையங்களின் தொடக்கத்தையும் கொண்டாடுகிறது!




சென்னை, 23 டிசம்பர் 2024: இந்தியாவின் முன்னணி உயர்தர ஜுவல்லரி பிராண்டுகளில் ஒன்றான மிஆ பை தனிஷ்க், சமீபத்தில் சென்னையில் மிக அதிகம் எதிர்பார்க்கப்பட்ட தனது தனித்துவமான ரன்வே ஸ்டார் நிகழ்வை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது. பிரத்தியேக மாலை நேரமானது விசுவாசமிக்க மிஆ வாடிக்கையாளர்களை ஒன்றிணைத்ததோடு, இம்மாநகரத்தின் உற்சாகமிக்க வாடிக்கையாளர்கள் மீது மிஆ கொண்டிருக்கும் அக்கறையையும், அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தும்விதமாக அமைந்திருந்தது. இந்நிகழ்வு வாடிக்கையாளர்களின் தனித்துவமிக்க ஆளுமை, நம்பிக்கை மற்றும் பாணியைக் கொண்டாட வழி வகுக்கும் வகையில் வாடிக்கையாளர்களை மேடையில் ஏற்றி, மிஆ ஆபரணங்களால் அலங்கரிக்க செய்து, வசீகரமாக ரன்வேயில் நடக்க செய்து அழகுப் பார்த்தது. இது நவீன யுகத்தைச் சேர்ந்த மிஆ பெண்ணின் ஆத்மார்த்தமான ஆளுமையை வெளிப்படுத்திய நிகழ்வாக சிறப்புற செய்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ரசனைமிக்க நிகழ்வோடு சேர்ந்த ஒன்றாக, மிஆ சென்னையில் தனது விற்பனை செயல்பாடுகளை விரிவுபடுத்தும் விதமாக புதிய விற்பனை நிலையங்களை அறிமுகப்படுத்தி இருக்கிறது. டிசம்பர் 20-ம் தேதி வளசரவாக்கம், கிழக்கு கடற்கரைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை மற்றும் ஏரோஹப் ஆகிய இடங்களில் நான்கு புதிய பிரத்தியேக விற்பனை நிலையங்களை கீழ்கண்ட முகவரிகளில் அறிமுகப்படுத்துகிறது.

1. மிஆ பை தனிஷ்க், எண்:151-6, ஆற்காடு சாலை, பிருந்தாவன் நகர், வளசரவாக்கம், சென்னை - 600 087. 2. மிஆ பை தனிஷ்க், 6, பாண்டியன் நகர், வெட்டுவாங்கேணி, கிழக்கு கடற்கரை சாலை, வெட்டுவான் அருகில், சென்னை - 600 041. 3. மிஆ பை தனிஷ்க், 4/668, மேற்கு பாரி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா அவென்யூ, துரைப்பாக்கம், பழைய மகாபலிபுரம் சாலை, சென்னை - 600 097.

4. மிஆ பை தனிஷ்க், எண் ஏ9, தரை தளம், ஏரோ ஹப் மால், மீனம்பாக்கம், சென்னை - 600 027. இந்த புதிய விற்பனை நிலையங்கள் மிகப்பிரம்மாண்டமாக 4300 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளன. இங்கு வாடிக்கையாளர்கள் பழைய தங்க நகைகளை எந்தவிதமான தடைகளும் இல்லாமல் எளிதில் பரிமாறிக்கொள்வதற்கும், புதிய ஆபரணங்களாக மேம்படுத்துவதற்கும் உதவும் நோக்கத்துடன் காரட் மீட்டர்கள் பொருத்தப்பட்டு உள்ளன. மேலும், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மிஆ சென்னை வாடிக்கையாளர்களுக்காக, அவர்கள் அன்றாடம் அணியும் ஆபரணங்கள் சர்வதேச போக்குகளைப் பிரதிபலிக்கும் வகையிலும், நவீன பாணி அதனுடன் அழகுற கலந்திருக்கும் வகையிலும் இருக்கவேண்டும் என்பதில் மிஆ கொண்டிருக்கும் அக்கறையையும், அர்ப்பணிப்பையும் வெளிக்காட்டும் வகையில் மிஆ வழங்கும் ஆபரணங்கள் அமைந்திருக்கின்றன.

ரன்வே ஸ்டார் நிகழ்வு மற்றும் நான்கு புதிய விற்பனை நிலையங்கள் அறிமுகம் குறித்து பேசிய தனிஷ்க் பை மிஆ-வின் சில்லறை வர்த்தகப் பிரிவு தலைவர் திரு. சஞ்சய் பட்டாச்சார்ஜி கூறுகையில், "மிஆ பை தனிஷ்க்கிற்கு மிக முக்கியமான நகரம் என்ற பெருமையைப் பெற்றிருக்கும் சென்னையில், மிஆ ரன்வே ஸ்டார் நிகழ்வை இங்கு நடத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு முயற்சியிலும், எங்களது வாடிக்கையாளர்களை மையமாக கொண்டே மேற்கொண்டு வருகிறோம். மேலும் இந்த உற்சாகமான நிகழ்வு மற்றும் எங்களது புதிய விற்பனை நிலையங்களின் அறிமுகம், நவீன தமிழ் பெண்களுக்கு நவநாகரீக நகைகளை இன்னும் எளிதாக கிடைக்க செய்ய வேண்டுமென்பதிலும், மறக்க முடியாத அனுபவங்களை வழங்குவதிலும் நாங்கள் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. எங்கள் வாடிக்கையாளர்கள் மிஆ வின் வடிவமைப்புகளை ரன்வே ஸ்டார் நிகழ்வில் நம்பிக்கையுடன் காட்சிப்படுத்துவதைப் பார்த்த பொழுது, அவர்களுடன் நாங்கள் பகிர்ந்து கொண்டிருக்கும் வலுவான உறவுக்கு சான்றாக அமைந்திருப்பதை உணர முடிகிறது. இப்போது, சென்னை நகரத்தில் 14 பிரத்தியேக விற்பனை நிலையங்களுடன், இம்மாநகரின் உற்சாகமிகுந்த, விவேகமான வாடிக்கையாளர்களுடன் எங்கள் உறவை மேலும் ஆழப்படுத்துவதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறோம். சென்னையில் இருக்கும் எங்களது வாடிக்கையாளர்கள் சமகால பாணியில் ஆர்வமுள்ளவர்கள். மேலும், நவீன நேர்த்தியுடன் கலாச்சார பாரம்பரியத்தை அழகுடன் ஒன்றிணைக்கும் நகைகளைப் பாராட்டுகிறார்கள். இதனால் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் அவர்களின் ரசனைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஆபரணங்களை வடிவமைத்து வழங்குவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.'' என்றார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள விற்பனை நிலையங்களில் மிஆ-வின் சமீபத்திய பண்டிகை நகைத்தொகுப்புகள் இடம்பெற்றுள்ளன. இதில் சிலிர்ப்பூட்டும் 'மிஆ டிஸ்கோ' நகைத்தொகுப்பும் அடங்கும், இந்த நகைத்தொகுப்பு, 1970-களின் பாணியான டிஸ்கோ காலத்தின் வண்ணமிகு கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. தங்களுக்கேற்ற வகையில் மாற்றியமைத்து கொள்ள உதவும் வடிவமைப்புகளுடன், இந்நகைத்தொகுப்பு வாடிக்கையாளர்கள் பல தோற்றங்களில் வசீகரிக்கும் வாய்ப்புகளையும் வழங்குகிறது. இதனால் பெரிதாக கவனத்தை ஈர்க்காத நேர்த்தியை, மற்றவர்களை திரும்பிப் பார்க்க செய்யும் வசீகரத்தையும், அழகையும் எளிதில் பெற உதவுகிறது. இவற்றுடன் வாடிக்கையாளர்கள் 14 காரட் மற்றும் 18 காரட் தங்கத்தில் வடிவமைக்கப்பட்ட மெல்லிய எடையிலான, சமகால வடிவமைப்புகளில் இருக்கும் ஆபரணங்களையும் தேர்ந்தெடுக்க முடியும். இது, அன்றாடம் அணிவதற்கு உகந்த ஆபரணங்களுடன், ஸ்டைலை அழகுற கலந்திருப்பது மிஆ-வின் நோக்கத்தை எடுத்து காட்டுகிறது. இவை மட்டுமில்லாமல் இதய வடிவத்தில் அறிமுகமாகி இருக்கும் லவ்ஸ்ட்ரக் சாலிடர்கள், நவநாகரீகமான 'ஐ-ஐ' வடிவமைப்புகள் மற்றும் காதணிகள், பதக்கங்கள், நெக்லஸ்கள், வளையல்கள், வளையல்கள், மோதிரங்கள், மங்களசூத்திர ஆபரணங்கள் போன்ற பல்வேறு பிரிவுகளிலான ஆபரணங்களும் இங்கு விற்பனைக்கு உள்ளன.

## சீரீஸ் ஏ நிதிதிரட்டல் சுற்றில் ராக்கெட்ஷிப்.விசி மற்றும் ஸ்பெஷல் இண்வெஸ்ட் நிறுவனங்களிலிருந்து 8 மில்லியன் டாலரை பெற்றிருக்கும் மைண்ட்க்ரோவ் டெக்னாலஜிஸ்

மதுரை, 23 டிசம்பர் 2024: செமிகண்டக்டர் வடிவமைப்பு ஸ்டார்ட் அப் நிறுவனமான மைண்ட்க்ரோவ் டெக்னாலஜிஸ், ஒரு சீரீஸ் ஏ நிதி திரட்டல் சுற்றில் 8 மில்லியன் டாலர் நிதியை திரட்டியிருப்பதாக அறிவித்திருக்கிறது. இந்த சுற்று முதலீட்டை ராக்கெட்ஷிப்.விசி மற்றும் ஸ்பெஷல் இண்வெஸ்ட் இணைந்து நடத்தியுள்ளன, இதில் மேலா வென்சர்ஸ் மற்றும் முன்னணி முதலீட்டாளர்களான பீக் எக்ஸ்வி பார்ட்னர்ஸ், ஒயிட் போர்ட் கேப்பிட்டல், நிஷ்சேய் கோயல் ஆகியோர் பங்குபெற்றுள்ளார்கள். புதிய பங்கு பெற்றவராக அன்ஷுல் கேயல்-ம் இணைந்துள்ளார். இந்த மூலதன முதலீட்டை பயன்படுத்தி, தனது பணியாளர்களின் எண்ணிக்கையை விரிவாக்கவும் மற்றும் தனது பொறியியல் திறன்களை மேம்படுத்தவும் இந்நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது.

இம்முதலீடானது, அதன் முதல் சிப் தயாரிக்கப்படுவதையும் மற்றும் விற்பனை செய்யப்படுவதையும் துரிதமாக்கும்.

2024 மே மாதத்தில், 28என்எம் என்ற அளவுடன் இந்தியாவின் முதல் வர்த்தக தரத்திலான உயர் செயல்திறன் மைக்ரோகண்ட்ரோலர் எஸ் ஓ சி (சிஸ்டம்-ஆன்-சிப்) என்ற "செக்யூர் எல் ஓ டி" -ஐ இந்நிறுவனம் அறிமுகம் செய்திருந்தது. கைக்கடிகாரங்கள், மீட்டர்கள், பூட்டுகள் மற்றும் நுழைவுக் கட்டுப்பாடு யூனிட்கள் போன்றவற்றை இணைக்கப்பட்ட ஸ்மார்ட் சாதனங்களாக மாற்றுகிற எலக்ட்ரானிக் கருவிகளுக்காகவும் மற்றும் பிரிண்டர்கள் மற்றும் பி ஓ எஸ் மெஷின்கள் போன்ற ஆற்றலளிப்பு சாதனங்களுக்கும் இது பயன்படும். இந்த சிப் 2025-ம் ஆண்டின் மத்தியில் சந்தையை சென்றடைய திட்டமிடப்பட்டிருக்கிறது.

## ஆஸ்துமா நோய்க்கான அதி நவீன சிகிச்சைக்கான சிறப்பு கிளினிக்: சென்னை கிளெனீகல்ஸ் ஹாஸ்பிடலில் திறப்பு




சென்னை, 23 டிசம்பர் 2024: ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பான மற்றும் மேம்பட்ட சிகிச்சை அளிப்பதற்கான சிறப்பு கிளினிக் சென்னை கிளெனீகல்ஸ் ஹாஸ்பிடலில் இன்று திறக்கப்பட்டது. இந்த அதி நவீன ஆஸ்துமா கிளினிக்கை சென்னை கிளெனீகல்ஸ் ஹாஸ்பிடல் தலைமை செயல் அதிகாரி டாக்டர் நாகேஸ்வர ராவ் மற்றும் இம்மருத்துவமனையின் மருத்துவ ஆலோசகர் மற்றும் நுரையீரல் நுண்துளையீட்டு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சுரேஷ் சகாதேவன் ஆகியோர் முன்னிலையில் தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர், டாக்டர் ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

கடுமையான ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மேம்பட்ட சிகிச்சை அளிக்கும் விதமாக இந்த கிளினிக் திறக்கப்பட்டுள்ளது. ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்காவிட்டால் அதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த கிளினிக்கில் நுரையீரல் நிபுணர்கள், ஒவ்வாமை நிபுணர்கள் மற்றும் சுவாச சிகிச்சை நிபுணர்கள் உள்ளனர். இங்கு வரும் ஆஸ்துமா நோயாளிகளுக்கு அதன் தன்மை மற்றும் தீவிரம் ஆகியவை குறித்து கண்டறிந்து அதற்கேற்ப அதிநவீன மருத்துவ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிகிச்சை அளிக்கப்படும். இதன் காரணமாக நோயாளிகள் சிறந்த பலனைப் பெற முடியும். மேலும் இங்கு ஒவ்வொருவரின் நோய் பாதிப்பிற்கு ஏற்ப தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சைத் திட்டங்கள், மருந்து, வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் அது குறித்த விழிப்புணர்வு ஆகியவை ஏற்படுத்தப்பட உள்ளது.

இந்த புதிய கிளினிக் குறித்து டாக்டர் சுரேஷ் சகாதேவன் கூறுகையில், சென்னையைப் பொறுத்தவரை, காற்றில் அதிக மாசு, ஈரப்பதம் மற்றும் பிற சுற்றுச்சூழல் காரணங்களால் ஆஸ்துமா பிரச்சினை அதிகரித்து வருகிறது. இதற்கான உடனடி சிகிச்சை என்பது மேலும் அபாயத்தை ஏற்படுத்தாமல் அவர்களை பாதுகாக்கும். கடுமையான ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேம்பட்ட சிகிச்சை அளிப்பதற்காக எங்கள் கிளினிக் திறக்கப்பட்டுள்ளது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இங்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக சிறப்பான சிகிச்சை அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

இது குறித்து நுரையீரல் நுண்துளையீட்டு சிகிச்சை நிபுணரும், நுரையீரல் சிகிச்சை பிரிவு திட்ட இயக்குனருமான டாக்டர் அபர்ஜிண்டால் கூறுகையில், உலக அளவில் ஆஸ்துமா நோயால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்தியாவைப் பொறுத்தவரை 3 முதல் 4 சதவீத பெரியவர்களுக்கும், 10 முதல் 15 சதவீத குழந்தைகளுக்கும் ஆஸ்துமா பிரச்சினை உள்ளது. இதில் அடிக்கடி பாதிப்பு, தொடர்ச்சியான அறிகுறிகள் மற்றும் ஒவ்வொரு நாளும் அதிகரிக்கும் பாதிப்பு ஆகியவற்றின் காரணமாக 5 முதல் 10 சதவீதம் பேர் கடுமையான ஆஸ்துமா என வகைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

இம்மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் நாகேஸ்வர ராவ் கூறுகையில், இங்கு வரும் அனைத்து நோயாளிகளுக்கும் தரமான மற்றும் சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அதற்கு சான்றாக எங்களின் அதி நவீன ஆஸ்துமா கிளினிக் துவக்கப்பட்டுள்ளது. இங்கு மேம்பட்ட சிகிச்சைகள் மற்றும் சிக்கலான சுவாச பிரச்சினைகள் உள்ள நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

துவக்க விழாவில், தீவிர ஆஸ்துமா மேலாண்மை, கர்ப்ப காலத்தில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் ஆஸ்துமா காரணமாக வாழ்க்கையில் பலர் சந்தித்து வரும் பிரச்சினைகள் ஆகியவை குறித்தும் மருத்துவ நிபுணர்கள் தங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர்.

## அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் நடந்தேறிய மனித நேயத்தை வெளிப்படுத்தும் 'கொடுத்து மகிழ்வோம் ' நிகழ்வு




சென்னை, 23 டிசம்பர் 2024: கல்வித் துறையில் சிறந்து விளங்கும் சென்னையின் முன்னணிக் கல்வி நிறுவனமான அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, கல்லூரியின் முன்னாள் செயலர், அன்பே உருவாய் விளங்கிய திரு எம். சர்தார்மல் சோர்டியா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், 'கொடுத்து மகிழ்வோம்' நிகழ்வைக் கல்லூரி வளாகத்தில் நடத்துவதில் பெருமிதம் கொள்கிறது.


இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, புழுதிவாக்கத்தில் உள்ள 'அணைக்கும் கரங்கள்' என்ற குழந்தைகள் காப்பகத்தைச் சேர்ந்த 40 குழந்தைகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். விழாவிற்கு மேலும் அணிசேர்க்கும் வகையில், கல்லூரியின் சார்பாக ஒவ்வொரு குழந்தைக்கும் பள்ளிப் பைகள், மதிய உணவுப் பைகள், தண்ணீர் பாட்டில்கள் மற்றும் டிபன் பாக்ஸ்கள் பரிசாக வழங்கப்பட்டன. மேலும், கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் 'அணைக்கும் கரங்கள்' காப்பகத்துக்குத் தேவைப்பட்ட அத்தியாவசியப் பொருட்களை பெருமளவில் வழங்கியுள்ளனர். இப்பொருட்களைக் கல்லூரி நிர்வாகக் குழுவினர் 'அணைக்கும் கரங்கள்' காப்பக நிறுவனரிடம் ஒப்படைத்தனர்.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் செயலர், உதன் குமார் சோர்டியா அவர்கள் கூறுகையில், "இந்த முன்னெடுப்பு எங்கள் மாணவர்களிடையே அருட்குணம் மற்றும் சமூக சேவை ஆகிய தகைசால் விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் கல்லூரி கொண்டுள்ள கடப்பாட்டினை எடுத்துக்காட்டுகிறது. 'கொடுத்து மகிழ்வோம்' என்ற இந்நிகழ்வு, ஆதரவற்றோர்க்கு பொருளுதவி வழங்குவது என்ற நோக்கத்திற்காக மட்டுமல்லாமல் எங்கள் மாணவர்கள் மானுட சமுதாயத்திடையே காட்ட வேண்டிய மனிதநேயத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பொருட்டும் நிகழ்த்தப்படுகிறது. ஆதரவு வேண்டி வாழும் குழந்தைகளின் தேவையை நிறைவேற்றுதல் என்ற நோக்கில் நடத்தப்பட்ட இந்நிகழ்வு, எங்கள் மாணவர்கள் பரிவும் சமூகப் பொறுப்பும் உடையவர்களாக மாறுவதற்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுத் தரும் என்ற நோக்கத்தையும் உள்ளடக்கியது" என்றார்.

இந்நிகழ்வினைச் சுழல் 1 மற்றும் சுழல் 2 இன் மாணவர் நலப் பேரவையும் (எஸ் டபிள்யூ சி & எஸ் டி சி) அவ்வமைப்பைச் சார்ந்த பேராசிரியர்களும் ஒருங்கிணைந்து நடத்தினர். மாணவர் நலப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேடிக்கை விளையாட்டுகளில் குழந்தைகள் கலந்துக் கொண்டனர். அதைத் தொடர்ந்து ஏ எம் ஜெ சியின் நாடகக் குழு (தியேட்டர் கிளப்) ஏற்பாடு செய்த மௌன மொழி நாடகம் (மைம்) அரங்கேற்றப்பட்டது.

'கொடுத்து மகிழ்வோம்' போன்ற இந்நிகழ்வுகளின் வழி மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களிடையே சமூகத்தின் மீதான அக்கறை மனப்பான்மையை வளர்க்கும் சூழலை கல்லூரி ஊக்குவிக்கிறது. அகப் புறப் பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய இந்நிகழ்வின் மூலம், பரந்து பட்ட சமூகத்திற்கு உதவுவதையே இலக்காகக் கொண்டுள்ள நிறுவனத்தின் சமூக அக்கறை புலப்படுகிறது.

## ஈக்விடாஸ் சிறு நிதி வங்கியின் நிதி உள்ளடக்கத்திற்கான அர்ப்பணிப்பு 1.45 கோடி மக்களின் வாழ்க்கையை மாற்றுகிறது




சென்னை, 23 டிசம்பர் 2024: இந்தியாவின் மிகப்பெரிய எஸ் எஃப் பி-களில் ஒன்றான ஈக்விடாஸ் சிறு வணிக வங்கி ஆனது நிதி உள்ளடக்கம் மற்றும் சமூக மாற்றத்தை உறுதி செய்வதற்கான அவர்களின் பல ஆண்டு கால அர்ப்பணிப்பை பெருமையுடன் நினைவுகூர்கிறது. தொடக்கத்திலிருந்தே ஈக்விடாஸ் ஆனது பல்வேறு சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டு முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் மூலம் பாரம்பரிய வங்கி சேவைகளுக்கு அப்பால் சென்று தனிநபர்கள் மற்றும் சமூகங்களை மேம்படுத்துவதில் உறுதியாக உள்ளது.

"வாழ்க்கையை மேம்படுத்துதல் மற்றும் நிலையான சமூகத்தை கட்டமைத்தல் என்ற கூரிய நோக்கத்துடன் ஈக்விடாஸ் எப்போதும் இயக்கப்படுகிறது," என்று ஈக்விடாஸ் எஸ் எஃப் பி இன் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. பி என் வாசுதேவன் கூறினார். "இந்த ஆண்டுகளில் ஈக்விடாஸ் டெவலப்மெண்ட் இனிஷியேடிவ்ஸ் ட்ரஸ்ட் (ஈ டி ஐ டி) ஏற்படுத்திய மாற்றத்தக்க செயல்பாட்டினால் நாங்கள் மிகுந்த பெருமை கொள்கிறோம். அதன்படி ஈக்விடாஸ் ஆனது, ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பார்வையை அளித்துள்ளது. ஆயிரக்கணக்கானோருக்கு தரமான கல்வியை வழங்கி, பெண்களுக்கு திறன்களை மேம்படுத்தி வரும் ஈ டி ஐ டி க்கு ஆண்டுதோறும் எங்கள் லாபத்தில் 5% பங்களிப்பை அளிப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். இந்த முயற்சிகள் மூலம், வறுமை மற்றும் சமத்துவமின்மைக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்ய நாங்கள் பாடுபட்டுள்ளோம். நாம் எதிர்நோக்கும்போது, புதுப்பிக்கப்பட்ட வீரியத்துடன் எங்கள் பணியைத் தொடரவும், வரவிருக்கும் தலைமுறைகளுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கவும் நாங்கள் உத்வேகம் பெறுகிறோம்."

கடந்த ஆண்டுகளில், ஈக்விடாஸ் குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைந்து சமூகத்தை மேம்படுத்தியுள்ளது:

● 31 லட்சத்திற்கும் மேற்பட்ட கண் பராமரிப்பு பயனாளிகள்

● வேலைவாய்ப்பு கண்காட்சிகள் மூலம் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம்

● எக்விடாஸ் குருகுல் பள்ளிகளில் 7000+ மாணவர்களுக்கு கல்வி

● திறன் பயிற்சி திட்டங்களால் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

● 5000+ நடைபாதை குடியிருப்பாளர்களுக்கு மறுவாழ்வு சேவை.